IN THE COURT OF DISTRICT MUNSIF–CUM–JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.

OS No. 313/22023

**P.W.1**

| | |
|---|---|
| Name | : சந்திரன் |
| Father/Husband Name | : |
| Place | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 76 |
| Date | :17–10–2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.10.2025.

சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**<u>1, 2 மற்றும் 11 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

2. நான் இந்த வழக்கின் 2 ஆம் வாதி என்றால் சரிதான். அந்த இடத்திற்கு பட்டா வேண்டும் என்று பரிகாரம் கோரியுள்ளோம். நான் இளம் பொறியியல் படித்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தை யார் தயார் செய்தது என்றால் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தையும் என்னுடைய வழக்கறிஞர் தான் தயார் செய்தார் என்றால் நான் சொல்ல அவர் தயார் செய்தார். வழக்கு சொத்தின் புல எண். 46/5. அதன் எல்லைகள் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிகளையும் எனக்கு நன்கு தெரியும். அவர்களை எனக்கு எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் 2008 ஆம் ஆண்டில் இருந்து தெரியும். எவ்வாறு அவர்களைத் தெரியும் என்றால் எங்கள் இடத்தை அவர்களுக்கு குத்தகைக்கு கொடுத்திருந்தோம். குத்தகைக்கு கொடுத்த பிறகு அதற்கான

ஆவணங்களை அவர்களிடம் இருந்து நாங்கள் மீண்டும் வாங்கினோமா என்றால் தெரிந்தவர்கள் என்பதற்காக அதை மீண்டும் வாங்கவில்லை.

3. பிரதிவாதிகள் வழக்கு சொத்தின் அருகிலேயே இரண்டு ஏக்கர் நிலம் உள்ளது என்றாலும் எனவே என்னிடமிருந்து அவர்கள் குத்தகை பெற வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாள் சரியல்ல. வா.சா.ஆ. 1 ன் படி வழக்கு சொத்தை 18/01/1971 அன்று சின்னப்ப நாயக்கர் என்பவர் கிரையம் பெற்று உள்ளாரா என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ல் வழக்கு சொத்து குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இரண்டாவது இலக்க சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 சொத்து விவரத்தில் வழக்கு சொத்தின் புல எண்ணிற்கு இணையாக பைமாஸ் எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

4. வா.சா.ஆ.2 கிரைய ஆவணம் என்பது சின்னப்ப நாயக்கர் கன்னியப்பன் என்பவருக்கு கொடுத்த கிரைய ஆவணம்தான் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 சொத்து விவரத்தில் வழக்கு சொத்து எத்தனையாவது இலக்க சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் இரண்டாம் இலக்க சொத்தாக காட்டப்பட்டுள்ளது. அதேபோன்று வழக்கு சொத்திற்கு வா.சா.ஆ. 2 ல் பைமாஸ் எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 கிரைய ஆவணம் நான் கிரயம் பெற்ற ஆவணம் தான் என்றால் சரிதான். அதில் வழக்கு சொத்தின் புல எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

5. அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களுக்கு பைமாஸ் எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் அதில் புல எண். 46/5 என்பதற்கு பதிலாக 45/6 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 ஆவணம் மூலமாக புல எண். 45/6 என்ற சொத்தை கன்னியப்பன் கிரயம் வாங்கி உள்ளாரா என்றால் இல்லை. எனவே நான் புலஎண். 45/6 என்ற சொத்தை கன்னியப்பன் நாயக்கர் கிரையம் பெறவில்லை என்றால் சரிதான். எனவே நான் கன்னியப்பன் நாயக்கர் என்பவரிடமிருந்து புல எண். 46/5 ல் உள்ள 27 சென்ட் இடத்தை கிரையம் பெறவில்லை என்றால் சரிதான். நான் இடத்தை தான் வாங்கினேன் அதன் புல எண் எனக்குத் தெரியாது.

6. புல எண். 46/5 சொத்தை நான் நேரில் சென்று பார்த்ததில்லை என்றால் சரியல்ல. பார்த்தேன். எப்போது நான் நேரில் சென்று பார்த்தேன் என்றால் தேதி நினைவில்லை. 1995 ஆம் ஆண்டு நேரில் சென்று பார்த்தேன். என்னுடன் அப்போது யாரெல்லாம் உடன் வந்தது என்றால் நானும் என் மனைவி மகன் மற்றும் கோதண்டம் என்ற கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் சென்று பார்த்தோம். அப்போது அந்த சொத்தை நாம் தவறாக வாங்கி விட்டோம் என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் அப்போது எனக்கு தெரியாது. நான் அப்போது பட்டா விண்ணப்பித்தேனா என்றால் இல்லை. நான் ஏன் பட்டாவிற்கு விண்ணப்பிக்கவில்லை என்றால் நான் 25 ஏக்கருக்கு மேல் நிலம் வாங்கியுள்ளேன். எதற்கும் நான் பட்டா விண்ணப்பித்ததில்லை. அவ்வாறு பெறவேண்டும் என்பது எனக்கு அப்போது தெரியாது.

7. நான் கிரயம் பெற்றதாக சொல்லும் 25 ஏக்கர் நிலத்திற்கு பைமாஸ் நம்பர் உள்ளதா என்றால் இல்லை. நான் வழக்கு சொத்தை கிரயம் பெறவில்லை என்றாலும் வழக்கு சொத்தை நான் அனுபவிக்கவில்லை என்றாலும் அதை நான் நேரில் பார்த்ததில்லை என்றாலும் நான் சென்னையிலேயே நிரந்தரமாக தங்கி விட்டதால் அந்த சொத்து குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் அதனால் தான் நான் பட்டாவும் விண்ணப்பிக்க வில்லை என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 5 ல் 2 மற்றும் 3 வாதிகள் கிரயம் பெற்ற நாளிலிருந்து அதை எவ்வித வில்லங்கமும் இன்றி அனுபவித்து வருவதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் பிரமாண வாக்கு மூலத்தில் குறிப்பிட்டபடி நானோ என்னுடைய மனைவியோ ஒருக்காலும் தாவா சொத்தை அனுபவித்ததில்லை என்றால் சரியல்ல.

**நேரமின்னையின் காரணமாக வேண்டுக்கோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

S/d– K.Nilavarasan, 17.10.2025

District Munsif cum Judicial Magistrate,

Thiruporur